களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக் கூடிய திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்கு மேல் வேலை கொடுக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்படுகிறதே, அந்த நிபந்தனையைத் தளர்த்தி வேலை வாய்ப்பை அதிகமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார்கள் மூலமாக அவற்றைப் பரிசீலனை செய்து கடன் கொடுக்கிறார்கள் கடன் வேண்டுவோர்கள் சான்றிதழ்கள் தயாரித்துக் கொடுப்பதிலே தகராறுகள் ஏற்படுகின்றன. இலங்கையிலிருந்தோ அல்லது பர்மாவிலிருந்தோ வரக்கூடிவர்கள் சான்றிதழ்களைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்படலாம். மேலும் சிலர் தாங்கள் வந்தபிறகு ஒரு நிதியுதவியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இரண்டாவது நிதியுதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்தாலும் முன்னாலேயே தாங்கள் பெற்ற நிதியுதவிக்கான சான்றிதழ்களைத் தராமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையினால்தான் தாமதம் ஏற்படலாமே தவிர அலுவலகங்களிலே எந்தவிதமான தாமதமும் இல்லை. தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புபற்றி, அடுத்த கேள்விக்கு நான் விரிவாகப் பதில் சொல்ல இருக்கிறேன். குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத் தான் வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலேதான் மத்திய அரசு கொடுத்த அந்த திட்டத்தின் அடிப்படையிலேதான் செய்து வருகிறோம். எனவே அதிலே நாம் எந்தவிதமான மாறுதலையும் செய்யமுடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்கிறபோது புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். சிலோனிலிருந்து அகில இந்தியாவிலும் வந்து குடியமர்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் என்று மத்திய அரசாங்கம் ஏதாவது புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறதா? அவர்களைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, அவர்களைப் பல்வேறு மாநிலங்களிலே குடியமர்த்தி புனர்வாழ்வு கொடுத்தாலும், நம்முடைய மாநிலமே அவர்களைப் பொறுப்பாகக் கவனிக்க தயாராக இருக்கிறதா? என் என்றால் புகார்கள் வந்திருக்கின்றன. சில மாநிலங்களில் சரியாக அவர்களையெல்லாம் கவனிக்கவில்லையென்று நான் ஏற்கனவே கூட சொன்னேன். எனவே நம்முடைய இந்த அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வருகிறவர்களை எப்படி எப்படிக் கவனிக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் திட்டம் கொடுத்திருக்கின்றதோ அந்த அடிப்படையிலேதான் கவனித்து வருகிறோம். அந்த வகையிலேதான் அவர்களைக் குடியமர்த்துகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக ஆகும் செலவுகளை எல்லாம் மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் வழங்குகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, ஆயிரக் கணக்கிலே இலங்கையிலேயிருந்து வருகிற அகதிகளை அந்தமான் தீவிலே குடியேற்றவேண்டும் என்று ஒரு நோக்கம் இருந்ததே. இப்பொழுது

1973 பிப்ரவரி 9]

அங்கே சில தீவுகளே சர்வே செய்யப்படாமல் இருக்கின்றன. இப்பொழுது ஒரு தமிழர் அந்தமான் தீவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் மத்திய அரசிலே அமைச்சராக இருக்கிறார். இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகளை அந்தமான் தீவிலே குடியமர்த்த மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படித்தான் மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருக்கிறது. அந்தமான் தீவு என்றாலே கைதிகளை அனுப்புகிற இடம் என்று அகதிகள்கூடத் தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். அங்கே செல்வதற்கு எத்தனை பேர்கள் விரும்புகிறார்கள் என்று கேட்டு மத்திய அரசு எழுதியிருக்கிறது. நாம் புள்ளி விவரங்களைத் தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

*67. வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பும் அகதிகளை குடியமர்த்துவதற்காக நீலகிரி மாவட்டத்தின் சில பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளை குடியமர்த்திப் புது வாழ்வு அளிக்கும் பொருட்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், குன்னூர் வட்டங்களில் 3,750 ஏக்கர் பரப்பில் தேயிலைத் தோட்டம் வளர்ப்பதற்காகப் பெரும் திட்டம் ஒன்று இவ்வரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியிலே இலங்கையிலிருந்து வருகிறவர்களைக் குடியமர்த்துகிறார்கள். அதைப்போலவே தாளவாடிப் பகுதியிலும் பர்கூர் பகுதியில், மைசூர் பகுதியின் எல்லைப் பகுதியிலே டீ, காபி வளரக்கூடிய சீதோஷ்ண ஸ்திதி இருக்கின்றது. எனவே அங்கே டீ, காபி தோட்டங்களை உண்டாக்குகிற சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்களை அங்கேயும் குடியமர்த்துவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரையிலும் கடலூர் பகுதியில், குன்னூர் பகுதியில்தான் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்புக் கொடுத்து வருகிறோம். அப்படிப்பட்ட திட்டத்தைத்தான் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. 3,750 ஏக்கர் அளவுக்கு தேயிலைத் தோட்டம் ஏற்படுத்தி வேலைகொடுக்க ஏற்பாடு இருந்தாலும், இதுவரையிலும் 848.33 ஏக்கர் வரையில்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. எனவே இவற்றை முறையாக நாம் ஒழுங்குபடுத்தி, வருகிற அகதிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம். வேறு திட்டங்களை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் இப்பொழுது இல்லை.

திரு மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்கு அரசுத் துறையிலே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கமிட்டி கூட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒரு கமிட்டி அமைக்கப் பட்டு இருக்கிறது. எப்பொழுது கூடும் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. கந்தப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இலங்கை யிலிருக்கின்ற தமிழர்களை இந்தியாவிற்கு ஏற்பதற்கு, இலங்கை—இந்தியா நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அங்குள்ள மக்கள் இங்கு வராத நிலையில், இந்தியாவில் மிக நல்ல வாழ்வு பெற்றுத்தருகிறோம் என்று அங்கே இருக்கின்ற இந்தியத் தூதுவராலயத்தின் மூலம் கவர்ச்சியாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. அப்படி அவர்களுக்கு என்ன என்ன செய்வோம் என்று வாக்குறுதி அளித்தார்களோ அவற்றை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு. எனவே வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற நிலையில் அப்படிப் பட்ட வாக்குறுதிகளைத் தரக்கூடாது என்று தமிழக அரசு இந்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தருகின்ற வாக்குறுதிகளை ஏற்றுக்கொண்டுதான் மத்திய அரசு மாநில அரசிடம் பொறுப்பை ஒப்படைக்கிறது. ஆனால் ஒப்பந்தத்தின்படி முழுமையாக அவர்கள் அங்கிருந்து வந்துசேரவில்லை. இப்பொழுது வருகிறார்கள், அப்பொழுது வருகிறார்கள் என்று தான் நிலைமை இருக்கிறதே தவிர இன்னும் முழுமையாக வந்து சேரவில்லை. வந்துவிடுவார்கள் என்று இலங்கை அரசும் அவ்வப்பொழுது அறிவித்துக்கொண்டிருக்கிறது. கவர்ச்சிகரமான திட்டங்கள் இல்லாத காரணத்தினாலேதான் இலங்கையிலிருந்து தாயகத் திற்குவர விரும்பவில்லை என்று கூறுவது அவ்வளவு சரியானதல்ல.

திரு கே. என். குமாரசாமி : இலங்கையிலிருந்து வருகிற அகதி களுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு ஏதாவது கொடுக்கிறதா ? இது சம்பந்தமாக அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தி நஷ்ட ஈடு பெற்று அதன்மூலம் அவர்களுக்கு ஒத்தாசை செய்வார்களா ? தனியாக அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்து புனர்வாழ்வு கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ பத்தா யிரம் ரூபாய் வரையிலும் இந்திய கரன்ஸியாக அவர்கள் கொண்டு வரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் பலர் அந்தத் தொகைகூட இல்லாத அளவுக்குத்தான் வந்திருக்கிறார்கள். எனவேதான் மத்திய அரசு கூறுகின்ற திட்டங் களையெல்லாம் மாநில அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது.